விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

**Valampurii**

ராம்கோ
RAMCO
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 01 செவ்வாய்க்கிழமை (13.02.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 56

## முல்லைத்தீவில் நேற்று விமானத் தாக்குதல்கள்

(கொழும்பு)

முல்லைத்தீவுப் பிரதேசத்தில் அடையாளம் காணப்பட்ட தமிழீழ விடுதலைப்புலிகளின் இலக்கு ஒன்றுக்கு நேற்றுக் காலை விமானத் தாக்குதல்களை மேற்கொண்டதாக தேசிய பாதுகாப்பு ஊடகதகவல்மையம்தெரிவித்துள்ளது.

இக் குண்டுத் தாக்குதல்கள் கிபீர் யுத்த விமானங்களை (04 ஆம் பக்கம் பார்க்க)

## சாவகச்சேரியில் நேற்று இருவர் சுட்டுக்கொலை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி புகையிரத வீதிக்கு அண்மையாகவுள்ள இறைச்சிக்கடை ஒன்றின் பணியாளர்கள் இருவர் இலக்கத்தகடில்லாத மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்றுக் காலை 9 மணியளவில் இடம் பெற்றுள்ளது. கடையின் காசாளரான மட்டுவில் வடக்கு சந்திரபுரத்தைச் சேர்ந்த இராசேந்திரம் தர்சன் (வயது 20) என்ற இளைஞன் தலையில் படுகாயமடைந்து சம்பவ (04 ஆம் பக்கம் பார்க்க)

## நெடுங்கேணியை நோக்கி எறிகணைத் தாக்குதல்

(வவுனியா)

வவுனியா நெடுங்கேணிப் பகுதியை நோக்கி நேற்று படையினர் எறிகணை வீச்சு தாக்குதல் நடத்தியுள்ளனர். நெடுங்கேணியின் மருதோடை ஊஞ்சால்கட்டிப் பகுதிகளை நோக்கி நேற்றுக் காலை 6 மணி முதல் எறிகணை வீச்சுத் தாக்குதலை நடத்தியிருப்பதாக (04 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுவர்களை படையில் சேர்ப்பது தொடர்பில் முழுமையான விசாரணை நடத்த வேண்டும்

## அலன் றொக்கின் அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் சிறுவர்கள் படையில் சேர்த்துக் கொள்வது தொடர்பாக அரசு இதய சுத்தியுடன் முழு அளவில் விசாரணைகளை நடத்த வேண்டுமென ஐக்கிய நாடுகள் சபையின் சிறார்களும் ஆயுத மோதலுக்குமான சிறப்புப் பிரதிநிதி அலன் றொக் தெரிவித்துள்ளார். அவரால் இலங்கையின் சிறுவர் விவகாரம் தொடர்பாக ஐ.நா.சபையில் சமர்பிக்கப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)



போர் நிறுத்த உடன்படிக்கையை இரத்து செய்யும்வரை தொடர் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை தேசியபிக்கு முன்னணி ஆரம்பித்துள்ளது. கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் புத்தர் சிலைக்கு அருகில் இந்தப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## திருகோணமலை கடற்பரப்பில் புலிகளின் இருபடகுகள் மூழ்கடிப்பு

### கடற்படை தெரிவிப்பு

(திருகோணமலை)

திருகோணமலை கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் இரண்டு படகுகளை கடற்படையினர் தாக்கி அழித்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

நேற்று அதிகாலை 4 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலில் 8 விடுதலைபுலிகள் கொல்லப்பட்டிருக்கலாம் என கடற்படை அறிவித்துள்ளது.

திருகோணமலைக் கடற்பரப்பில் புல்மோட்டை புடவக்கட்டுப் பகுதியில் சென்று கொண்டிருந்த இரண்டு படகுகளை தமது கடற்படையினர் தாக்கி அதில் ஒரு படகை முற்றாக நிர்மூலம் செய்ததாகவும் மற்றொரு படகு கைப்பற்றப்பட்டதாகவும் இலங்கை கடற் படைப் பேச்சாளர் டி.கே.பி. தசநாயக்க தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவிலிருந்து திருகோணமலைநோக்கிச் (04 ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்பெய்னிய கடற்பரப்பில் 10 இலங்கையர் மீட்பு

ஸ்பெய்னில் படகுகளில் கடலில் தத்தளித்து கொண்டிருந்த 372 சட்டவிரோதவாசிகளை ஸ்பெய்னிய விமானப்படையினர் மீட்டுள்ளனர். ஒருகிழமை படகில் தத்தளித்து கொண்டிருந்த இவர்கள் வழங்கிய அபாயக் குரலையடுத்து இவர்கள் ஸ்பெய்னிய விமான படையினரால் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்களுள் 305 காஷ்மீரை சேர்ந்த இந்தியர்களும், 22 மியான்மார்வாசிகளும் 10 இலங்கையர்களும் அடங்குவதாக ஏ.எப்.பி தெரிவித்துள்ளது. (ஏ-1)

## சட்டத்திலிருந்து யாரும் தப்பித்துக்கொள்ள முடியாது

### அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

சட்டத்தின் முன் அனைவரும் சமன் என பாதுகாப்பு விவகாரங்களுக்கான பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் பதவி நீக்கப்பட்ட மூன்று அமைச்சர்களும் அரசினால் கைது செய்யப்படலாம் என வெளிவந்த செய்திகள் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

யார் நாட்டின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக இருந்தாலும் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் அது எக்ஸ், வை அல்லது சற் ஆக இருக்கலாம் நாடு தற்போது மிகவும் ஆபத்தான (04 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்தகட்ட நடவடிக்கைகளை எதிர்வரும் வாரத்தில் எடுப்பேன்

### அநுரா எம்.பி.தெரிவிப்பு

எந்தக் கட்டத்திலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலிருந்து நான் விலகமாட்டேன். என்னை சுதந்திரக் கட்சியிலிருந்து எவராலும் விலக்கவும் முடியாது. அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் எனது அடுத்தகட்ட நடவடிக்கைகளை எதிர்வரும் வாரத்தில் எடுக்கவுள்ளேன் என்று தேசிய மரபுரிமைகள் அமைச்சிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் அநுரா பண்டாரநாயக்க தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் முன்னாள் தலைவரும் (04 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றத்தில் ஆசனங்களை ஒதுக்குவதில் மீண்டும் திருத்தம்

(கொழும்பு)

பாராளுமன்றத்தில் ஆசனங்களை ஒதுக்குவதில் மீண்டும் திருத்தங்களை மேற்கொள்ள கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அநுரா பண்டாரநாயக்க, மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராட்சி ஆகியோரின் அமைச்சுப் பொறுப்புக்கள் நீக்கப்பட்டதையடுத்தே இந் நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த ஆசனங்களிலும் மாற்றங்கள் ஏற்படுத்த வேண்டுமென பாராளுமன்ற அரசியல் விவகாரங்களுக்கான பணிப்பாளர் ஜெகத் கஜவீர தெரிவித்துள்ளார். எனினும் அவர்களுக்கு (04 ஆம் பக்கம் பார்க்க)

## பிரி.வெளிவிவகார அமைச்சர் இன்று இலங்கை வருகிறார்

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கான வெளிவிவகார இராஜாங்க மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான அமைச்சர் கலாநிதி கிங் கொகவல்ஸ் இன்று இலங்கை வரவுள்ளதாக இலங்கைக்கான பிரித்தானிய தூதுவராலயம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மூன்று நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கும் அவர் நாளை மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து அங்குள்ள அரசாங்க அதிகாரிகள் மற்றும் பிரதேசவாசிகளைச் சந்தித்து தற்போதைய நிலை குறித்து அறிந்து கொள்வார். (04 ஆம் பக்கம் பார்க்க)

# பொருட்களின் பங்கீடுகள் தொடர்பாக முக்கிய தீர்மானங்கள் நிறைவேற்றம்

## யாழ்.செயலகத்தால் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது ஏற்பட்டுள்ள பொருட் தட்டுப்பாட்டினை கருத்தில் கொண்டு அத்தியாவசிய பொருட்களின் விநியோகம் தொடர்பாக நேற்று முன்தினம் யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நடைபெற்றது.

இதில் பிரதேச செயலர்கள்,பலநோக்கு கூட்டுறவுச் சங்கத் ,தலைவர்கள்,பொது முகாமையாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

அக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் குறித்து யாழ்.அரச அதிபரினால் வெளியிடப்பட்ட அறிக்கை வருமாறு;

யாழ்.மாவட்டத்தின் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான அத்தியாவசியப் பணிகளைச் செய்கின்ற சகல உத்தியோகஸ்தர்களும் ;ஊழியர்களும் .மிகுந்த பொறுப்புணர்வுடனும் இயலக் கூடியளவு முறைப்பாடுகள் கிடைக்காத வகையில் ஒழுங்காகவும் சீராகவும் , திருப்திகரமாகவும் அவர்களுக்கான சேவைகளைச் செய்ய வேண்டும் எனப் பணிக்கப்பட்டனர்.

**அத்தியாவசியப் பொருட்களின் விநியோகம்**

2006 டிசம்பர் மாதத்திற்குரிய உலருணவு நிவாரண விநியோகங்கள் யாவும் 15.02.2007இற்கு முன்பாக முடிக்கப்பட்டு அவற்றின் கணக்குகள் சீர்செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு கட்ட நிவாரண விநியோகமும் குறிப்பிட்ட காலப் பகுதிக்குள் முடிவுறுத்தப்பட்டதும் 15 நாட்களுக்குள் அது தொடர்பான கணக்கு விபரங்கள் யாவும் ப.நோ.கூ. சங்கங்களால் யாழ்.மாவட்டச் செயலக புனர்வாழ்வுப் பகுதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும்,குறித்த கட்ட விநியோகத்திற்கான கணக்குகள் சீர்செய்யப்பட்ட பின்பே அடுத்த கட்ட விநியோகத்திற்கான பொருட்கள் வழங்குவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.காரணம் இக்கணக்கு விபரங்கள் யாவும் தேச நிர்மாண அமைச்சு அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் ஆகியோருக்கு அனுப்பிவைக்க வேண்டிய தேவை உள்ளது.

தற்பொழுது இருப்பில் இருக்கும் அரிசி,சீனி, பருப்பு ஆகிய பொருட்களின் இருப்புத் தொகைக்கு அமைவாகத் தற்போதைய கஷ்ட நிலைவரம் காரணமாகத் தமது வியாபாரத்தை மேற்கொள்வதற்குச் சம்மதம் தெரிவித்துள்ள சிறுவியாபாரிகளுக்கு இவ்விற்பனைப் பொருட்களை உடனடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது. மேலும் இந்த வார இறுதியளவில் மா விநியோகத்தினையும் இவ்வாறான ஏற்பாட்டின் அடிப்படையில் மேற்கொள்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**தேங்காயெண்ணை,. கற்பூரம்**

சிவாரத்திரி தின நிகழ்வுக்கெனக் கோயில் தேவைகளுக்குரிய தேங்காயெண்ணை ,கற்பூரம் என்பன ப.நோ.கூ.சங்கங்களின் பிரதான களஞ்சியங்களில் இருந்து விற்பனை செய்வது எனவும், அதற்குரிய தேவைகளின் அடிப்படையில் கோயில் நிர்வாகிகள் நேரடியாக அப்பொருட்களைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்.மாவட்டத்திற்கு சமூக சேவைகள் அமைச்சின் உ.தவியுடன் அனுப்பிவைக்கப்பட்டுள்ள 5 ஆயிரம் தேங்காய்களையும் சிவராத்திரி தினத்தைக் கொண்டாடும் கோயில்களுக்கு அந்தந்தப் பிரதேச ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக வழங்குவது எனவும் , இதற்கு மேலதிகமாக யாழ்.வணிகர் கழகத்தின் ஏற்பாட்டிலும் , யாழ்.இந்து மாமன்றத்தின் ஏற்பாட்டிலும் கற்பூரம் விநியோகிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. ப.நோ.கூ. சங்கங்களுக்கு கற்பூரம் விநியோகிக்கப்படும்.

**கூட்டுறவுச் சங்கங்களில் பால்மா விநியோகம்**

பின்வரும் பொருட்கள் விநியோகத்திற்காகப் ப.நோ.கூ.சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றன.

வயது வந்தவர்களும்,வைத்தியத் தேவைக்குரியவர்களுக்குமான ஆட்டா மா, கீறிம் கிறேக்கர் பிஸ்கட், கோர்லிக்ஸ்,நெஸ்ரமோல்ட்,பிஸ்கட் வகைகள்,குரக்கன் மா ,

இப் பொருட்கள் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இப்பொருட்கள் அத்தியாவசியமாகத் தேவைப்படுபவர்கள் மாத்திரம் ப.நோ.கூ.சங்கக் கிளைகள் ஊடாக இவற்றைப்பெற்றுக் கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

**நல்லெண்ணை உற்பத்தி**

அங்கீகரிக்கப்பட்ட தரமான நல்லெண்ணை உற்பத்தி செய்யும் உற்பத்தியாளர்களுக்கு எள் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன. இதனைப் பிரதேச செயலர்களின் சிபார்சின் அடிப்படையில் விநியோகிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆகவே நல்லெண்ணை உற்பத்தி செய்பவர்கள் தயவு செய்து தங்கள் தங்கள் பிரிவு பிரதேச செயலர்களுடன் இது தொடர்பாகத் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

ஒரு போத்தல் நல்லெண்ணையின் உற்பத்தி விலை ரூ.290/- ஆகவும் ,விற்பனை விலை ரூ.300/- ஆகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. உற்பத்தி செய்யப்படும் நல்லெண்ணை ப.நோ.கூ.சங்கக் கிளைகள் ஊடாக விநியோகிக்கப்படும்.

நல்லெண்ணை உற்பத்தியின் போது கிடைக்கின்ற எள்ளுப் புண்ணாக்கு யாவும் கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளரின் வேண்டுகோளுக்கு அமைவாகக் கால்நடை வளர்ப் போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஊடாகக் கால்நடை வளர்ப்போருக்கு விநியோகிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

எனவே நல்லெண்ணைஉற்பத்தி செய்வர்கள் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்திற்கு அதனை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இதன் விற்பனை விலை ஒரு கிலோ 40/- ரூபா எனக் கணிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

விநியோகத்திற்காக வழங்கப்படுகின்ற பொருட்களை கூடிய விரைவில் ப.நோ.கூ. சங்கங்களால் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் எனவும்; இவ்வாறு பெற்றுக் கொள்ளப்படுகின்ற பொருட்கள் யாவற்றையும் துரிதமாக மக்களுக்கு விநியோகிப்பதற்குரிய ஏற்பாடுகளைச் சகல ப.நோ.கூ.சங்கங்களாலும் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் இவற்றை பிரதேச செயலர்கள் கட்டுப்படுத்துவார்கள்.

**சைக்கிள் ரயர் பங்கீடு**

முதலாவது கட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட சைக்கிள் ரயர்கள் ரூ.472/-க்கு கல்வித் திணைக்களத்தின் ஊடாக பாடசாலை மாணவர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. தற்பொழுது அதன் விலை மீளாய்வு செய்யப்பட்டு ஒரு ரயர் 400/-ரூபா ஆகவும் ரியூப் 150/-ரூபா ஆகவும் விற்பனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. கல்வித் திணைக்களத்தின் ஊடாக மாணவர்களுக்குரியரியூப்வழங்கப்படும்பொழுது ஏற்பட்ட விலை வேறுபாடு சீர் செய் யப்படும். ரியூப்பெற்றுக்கொள் பவர்களுக்குரிய மேலதிக பண அறவீடு 72/- ரூபா கல்வித்திணைக் களத்தினால் மீளளிப்புச் செய்யப்படும்.

அடுத்த கட்டத்தில் தற்போது கிடைக்கப் பெற்றுள்ள சைக்கிள் ரயர் - ரியூப் தொகுதியைத் தபால் திணைக்களத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக 250 தபால் விநியோக ஊழியர்களுக்கு 500 ரயர்களும் 500ரியூப்பும் வழங்குவது எனத் தீர்மானிக்கப்பட்டது. மிகுதியாகவுள்ளவற்றை அலுவலகங்களுக்குச் சைக்கிளில் பயணம் செய்யும் உத்தியோகஸ்த்தர்களுக்கும் ஊழியர்களுக்கும் முன்னுரிமை அடிப்படையில் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக விநியோகிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

**ஊரடங்கு தளர்வு**

சிவராத்திரி தினத்தன்று ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட வேண்டும் என்ற இந்து சமயப் பேரவை ,சர்வதேவ இந்து குருமார் ஒன்றியம் ஆகியவற்றின் வேண்டுகோளுக்கு அமைவாக யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதியுடன் தொடர்பு கொள்ளப்பட்டது. இதன் பிரகாரம் சிவராத்திரி தினத்தன்று ஊரடங்குச் சட்டம் முழுமையாகத் தளர்த்தப் படுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.மேற்படி எடுக்கப்பட்ட தீர்மானங்களை உடனடியாக அமுல்படுத்துமாறு சம்பந்தப் பட்டவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ச-5)

# தமிழ் நாட்டுக்குச் செல்வோரின் எண்ணிக்கை திடீரென அதிகரிப்பு

(இந்தியா)

இலங்கையில் இடம்பெற்று வரும் அசாதாரண சூழ்நிலையடுத்து அதிக அளவிலான இலங்கையர்கள் அடைக்கலம்தேடி தமிழ் நாட்டிற்கு அகதிகளாக இடம் பெயர்ந்து வருவதாக தமிழக செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்தியாவின் தனுஷ்கோடி அருகேயுள்ள நடுத்துறைக் கடற்கரைப் பகுதிக்கு நேற்று முன்தினம் 53 இலங்கை அகதிகள் சென்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவர்களை அழைத்து சென்ற மூன்று படகுகோட்டிகள் கைது செய்யப்பட்டிருப்பதோடு அவர்களின் படகுகள் பறிமுதல் செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது..

விசாரணை செய்யப்பட்ட 53 இலங்கையரும் அகதிமுகாம்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை வவுனியா செட்டிகுளம் பிரதேசத்தைச் சேர்ந்த 21 பேர் படகு மூலம் இந்திய கடல் எல்லைக்குட்பட்ட பகுதிக்கு கடந்த 10ஆம் திகதி நள்ளிரவு சென்றடைந்துள்ளனர்.

கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த இவர்களை புதுக்கோட்டை மாவட்டத்தில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் விசைப்படகுகள் மூலம் முத்துக்குடா கிராமத்திற்கு அழைத்து செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து முத்துக்குடா கிராமத்திற்கு சென்ற பொலிஸார் 21பேரையும் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து சென்று விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன் பின்னர் இவர்கள் அனைவரையும் பொலிஸார் மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பிவைத்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (எ-3)

# ஆட்டோ மீது துப்பாக்கிச் சூடு

(வவுனியா)

வவுனியா நகரில் நேற்றுக்காலை பொலிஸாரின் உத்தரவை மீறிச்சென்ற முச்சக்கர வண்டியொன்றின் மீது பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தின் போது காயமடைந்த ஒருவர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக்காலை பெண்ணொருவர் குறிப்பிட்ட முச்சக்கர வண்டி மூலம் கடத்தப்படுவதாக ஏற்பட்ட சந்தேகத்தினையடுத்து துப் பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் இச்சம்பவம் தொடர்பாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர். (எ-3)

# யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் நாளை சந்தித்துக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்கான விசேட கலந்துரையாடல் ஒன்று நாளை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு வருமாறு;

எதிர்வரும் 19 ஆம் திகதி எமது பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகள் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. இந் நிலையில் மாணவர்களுக்கான சில அறிவுறுத்தல்களை வழங்கவேண்டியுள்ளமையினால் அனைத்துப் பீடங்களையும் சேர்ந்த சகல மாணவர்களையும் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறவுள்ள கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

உணவு,தங்குமிடம்,போக்குவரத்துத் தொடர்பாக கலந்துரையாடப்படவுள்ளதால் எதிர்காலத்தில் தங்களுக்கு ஏற்படும் அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ள இக் கலந்துரையாடலில் கலந்து கொள்வது அவசியம் ஆகும் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.(ச)

# 2 ஆயிரத்து700 தொன் மாவுடன் யால கப்பல் காரைநகரில்!

(கொழும்பு)

யாழ்ப்பாணத்திற்கென திருகோணமலையிலிருந்து யால என்ற கப்பலில் எடுத்துவரப்பட்ட 2ஆயிரத்து 700 மெற்றிக் தொன் மா காரைநகர் துறைமுகத்தில் இறக்கப்பட்டுவருவதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலக வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

அண்மையில் பருத்தித்துறை கடற்பரப்பில் இடம்பெற்ற மோதலையடுத்து பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல் மூலம் எடுத்து வரப்படும் பொருட்கள் இறக்கப்படுவது நிறுத்தப்பட்டது.இதனையடுத்து காங்கேசன்துறை துறைமுகம் , மயிலிட்டி துறைமுகம் ஆகியவற்றில் பொருட்கள் இறக்கப்பட்டு வருகின்றது.

எனினும் பொருட்கள் இறக்குவதில் தாமதம் ஏற்படுவதால் காரைநகர் துறைமுகத்தையும் பயன்படுத்த தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

அப்பகுதியில் கடல் ஆழம் குறைவாகக் காணப்படுவதால் சிறிய படகுகளிலேயே மாவை இறக்க வேண்டி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

ஞானத்துக்கு அருகதையற்றவர்கள் ஞானிகளைப் போல வேடம் போடுவதனால் பொதுமக்களுக்கு ஞானிகள் மீதே துவேசம் ஏற்படுகிறது.

—பிளேட்டோ

வலம்புரி

# பிக்குகள் முன்னணி,ஜே.வி.பி. வெற்றியடையுமா?

யுத்த நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக இரத்து செய்ய வேண்டுமென தேசிய பிக்குகள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமது வேண்டுகோளை நிறைவேற்றும் வகையில் உண்ணாவிரத போராட்டத்தையும் அந்த முன்னணி ஆரம்பித்துள்ளது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை நாட்டில் அமைதியை ஏற்படுத்திவிடும் என பிக்குகள் முன்னணி அச்சம் கொண்டுள்ளதா? என்பது ஆராயப்பட வேண்டிய விடயம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தற்போது நடைமுறையில் இருக்கிறதா என்ற கேள்வி மக்களிடையே ஏற்பட்டு பல மாதங்களாகி விட்டன.

அந்த உடன்படிக்கை அமுலில் இருக்கின்றதா? இல்லையா? என்பதைவிட உடன்படிக்கை இருதரப்பாலும் இன்னமும் இரத்து செய்யப்படவில்லை என்பதே இப்போது பிக்குகள் முன்னணி உட்பட்ட பேரினவாதிகளின் பெரும் கவலையாகும்.

அதாவது அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை இருதரப்பாலும் இரத்து செய்யப்படாத நிலையில் அதன் காலம் ஐந்து வருடங்களை நிறைவு செய்கிறது.

அங்கீகரிக்கப்பட்ட அரசும் ஓர் இனத்தின் விடிவிற்காக போராட்டத்தை நடத்தும் அமைப்பும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடன்படிக்கை ஒன்றில் கைச்சாத்திட்டு ஐந்து வருடங்கள் பூர்த்தியானால் அந்த அமைப்பு குறித்து அரசினாலும் உலக அரங்கிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட -அங்கீகரிக்கப்பட்ட அமைப்பாகும் என்பது பொது விதி.

இவ் விதியை தமிழீழ விடுதலைப்புலிகள் அடைந்து விட்டனர் என்றே கூறவேண்டும். யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருப்பதால் விடுதலைப்புலிகளுக்கு உலக அங்கீகாரம் கிடைத்துவிடும் என்ற அச்சமே பிக்குகள் முன்னணியின் உண்ணாவிரதப்போராட்டத்திற்கான அடிப்படையாகும்.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்றது என தீர்ப்பு வழங்கக்கோரி ஜே.வி.பி. உயர் நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்துள்ளது.

உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பைப் பெற்றுக் கொள்வதன் மூலம் யுத்த நிறுத்த உடன்படிக்கையை ஐந்து வருடங்களுக்கு முன்னதாகவே முடிவுறுத்துவது அதன் நோக்கமாகும்.

வடக்கு கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது எனக்கூறி உயர் நீதிமன்றில் செய்து கொண்ட மனுத்தாக்கலில் நீதிமன்றத் தீர்ப்பு சாதகமாக அமைந்தமை ஜே.வி.பியைப் பொறுத்தவரை வெற்றியாக இருக்கலாம்.

ஆனால் தேசிய ரீதியில் அதன் விளைவுகளை நோக்கினால் உண்மை வெளிப்படும். எனினும் வடக்கு கிழக்கு இணைப்பு சட்டத்திற்கு விரோதமானது என்ற உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பும் அதற்கேற்றவாறு அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளும் ஓரினத்தன்மையானவை.

இங்கு எடுக்கப்பட்ட அனைத்து முடிபுகளும் உள் நாட்டின் அரசியல் எல்லைகளுக்கு உட்பட்டவை. ஆனால் யுத்த நிறுத்த உடன்படிக்கை அவ்வாறானதல்ல.

இங்கு 'சர்வதேச அங்கீகாரம்' என்ற விடயம் முதன்மை பெறுகின்றது. அதாவது யுத்த நிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்றது என்ற தீர்ப்பை ஜே.வி.பி.பெற்றுக் கொண்டாலும் அதனை உலக நாடுகள் எந்தளவு ஏற்றுக் கொள்ளும் என்பதே இப்போதுள்ள பிரச்சினை.

அந்த வகையில் நோக்கினால் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஐந்து வருடகாலம் அமுலில் இருந்ததா இல்லையா என்பதை தீர்மானிப்பதிலும் விடுதலைப்புலிகளுக்கு அங்கீகாரம் வழங்குவதும் இலங்கையின் சட்ட எல்லைகளை மீறி உலக நாடுகளே தீர்மானிக்கப் போகின்றன.

ஆகவே பிக்குகள் முன்னணியின் உண்ணாவிரதமும் ஜே.வி.பி.செய்த மனுத்தாக்கலும் எந்தளவு தூரம் வெற்றி அடையும் என்பதை பொறுத்திருந்தே பார்க்கவேண்டும்.

# மாவட்ட செயலக அறிவித்தல்கள்

## நேர்முகப் பரீட்சை பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இலங்கை திட்டமிடல் சேவைக்கு விண்ணப்பித்த பரீட்சார்த்திகள் நிர்ணயிக்கப்பட்ட பரீட்சைத் திகதிக்கு போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை ஏற்பட்டதன் காரணமாக அப் பரீட்சையை யாழ்.மாவட்டத்தில் நடாத்துவது தொடர்பாக நிதி அமைச்சுக்கு விடுக்கப்பட்ட வேண்டுகோளின் பிரகாரம் அப்பரீட்சை பின்போடப்பட்டது.

இப் பரீட்சையை யாழ்.மாவட்டத்தில் நடாத்துவதாக நிதி அமைச்சின் செயலாளர் கலாநிதி பி.பி.ஜெயசுந்திர தொலைபேசி மூலம் அறிவித்துள்ளார்.

எனவே இப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்கள் யாழ். மாவட்ட திட்டமிடல் செயலகத்தில் தமது விபரங்களை உடனடியாக பதிவுசெய்யுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். பரீட்சைத்திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

## ஓய்வூதியத்தை யாழில் பெற அரச அதிபர் நடவடிக்கை

யாழ்.மாவட்டத்தில் உள்ளூராட்சி திணைக்களத்தில் ஓய்வூதியம் பெற்றுக்கொள்ளும் ஓய்வூதியர்கள் ஓய்வூதியத்தைப் பெற்றுக்கொள்வதில் ஏற்படுகின்ற தாமதங்கள் காரணமாக பல் வேறு கஷ்டங்களை எதிர்நோக்குவதால் யாழ். மாவட்டத்திற்குரிய கொடுப்பனவுகளை யாழ்.மாவட்டத்திலேயே வழங்குவதற்கு ஓய்வூதிய திணைக்களத்தின் பணிப்பாளர் கே.ஏ.திலகரட்ணவுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## தனியாருக்கு மருந்து அனுப்ப ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.தனியார் மருந்தகங்களுக்கு மருந்து வகை அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

யாழ்.குடாநாட்டில் மருந்து வகைகளின் விநியோகத்தை இலகுபடுத்தவே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன. (சு)

## பிரயாணத்திற்கான ஏற்பாடுகள்

புத்தகம் கட்டுநர் பதவிக்கு விண்ணப்பித்து அதற்கான நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களுக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி தொடக்கம் 22 ஆம் திகதி வரையான திகதிகளுக்கிடையில் கப்பலில் பிரயாணம் செய்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ஆகவே பரீட்சார்த்திகள் தமக்குரிய பாதுகாப்பு அனுமதியுடன் பிரயாணத்திற்கு தயாராக இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## உராய்வு நீக்கியை பெற விண்ணப்பிக்கலாம்

உராய்வு நீக்கி (Engine Oil) எண்ணெய் (வகை இல. எஸ்.ஏ.ஈ. 40,50) தேவையானவர்கள் தங்களது தேவையை பின்வருவோர் ஊடாக மாவட்ட செயலகத்திற்கு அறியத்தருமாறு வேண்டப்படுகின்றார்கள்.

ப.நோ.கூ.சங்கங்கள் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ஊடாகவும், தனியார் பாரவூர்தி உரிமையாளர்கள் தனியார் பாரவூர்தி உரிமையாளர் சங்கமூடாகவும், கூல் ஏயர் நிறுவனம் (Aggreco)இலங்கை மின்சாரசபையூடாகவும் ,வாகன சுத்திகரிப்பு நிலையங்கள் இலங்கை பெற்றோலிய கூட்டுஸ்தாபன பிரதேச முகாமையாளர் ஊடாகவும். (சு)

## 172க்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு புலமைப்பரிசில்

(யாழ்ப்பாணம்)

2006 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 172 புள்ளிகளையோ அதற்குக்கூடவோ அல்லது மாவட்ட மட்டத்தில் முதல் பத்தினுள்ளோ சித்தியடைந்த பிள்ளைகளுக்கு இலங்கை வங்கியினால் புலமைப் பரிசில் வழங்கப்படவுள்ளது.

இப் பிள்ளைகள் இலங்கை வங்கியில் தங்களுடைய சிறுவர் சேமிப்புக் கணக்கில் கடந்த வருடம் ஆகஸ்ட் 12 ஆம் திகதி முதல் ரூபா 2500 ஐ ஆகக்குறைந்த நிலுவையாக வைத்திருத்தல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் தாங்கள் கணக்கு வைத்திருக்கும் வங்கிக் கிளைக்குச் சென்று மேலதிக விபரங்களைப் பெற்று புலமைப் பரிசிலுக்கு விண்ணப்பிக்க முடியுமென வட பிராந்திய உதவிப்பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (சு)

# பரு.விலிருந்து தெய்வேந்திராமுனைவரை கடத்தல் சம்பவங்களே நடைபெறுகின்றன

## ரணில் விக்கிரமசிங்க குற்றச்சாட்டு

பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திராமுனைவரை இன்றைய நிலையில் கடத்தல்களே இடம்பெறுகின்றன. இவை பாரிய மனித உரிமை மீறல்களாகும். மனித உரிமை மீறல்கள் தொடர்பாக அரசாங்கம் மௌனமாக இருக்கின்றது என்று ஐக்கிய தேசிய கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சி தலைவருமான ரணில் விக்கிரசிங்க தெரிவித்தார்.

அரசாங்கம் இந்த மாத இறுதிக்குள் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைத்தால் புலிகள் அதனை ஏற்றுக்கொள்ளவேண்டும். ஏற்றுக் கொள்ளாவிட்டால் புலிகள் பயங்கரவாதத்தில் மட்டுமே நம்பிக்கை கொண்டுள்ளவர்கள் என்று சர்வதேச சமூகம் கூறிவிடும் . இது அரசாங்கத்திற்கு சாதகமாக அமையும் என்றும் அவர் மேலும் கூறினார்.

ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்டத்திற்கான செயற்குழு உறுப்பினர்களை சந்திக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மீரிகமவில் நடைபெற்றது. இங்கு கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையில், அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு அவர் மேலும் கூறியதாவது;

நாட்டில் இன்று பாரியளவில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. நாட்டில் எங்கு பார்த்தாலும் கடத்தல் சம்பவங்களே இடம் பெறுகின்றன. கொழும்பில், யாழ்ப்பாணத்தில் மற்றும் தெற்கில் என அனைத்துப் பிரதேசங்களிலும் கடத்தல்களே இடம்பெறுகின்றன. இவை பாரிய மனித உரிமை மீறல்களாகும். பருத்தித்துறையிலிருந்து தெய்வேந்திரா முனைவரை கடத்தல்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இது மிக முக்கியமாகவும் தீவிரமாகவும் ஆராயப்படவேண்டிய விடயமாகும்.

அரசாங்கம் இந்த மாத இறுதிக்குள் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை முன்வைக்க வேண்டும். அனைவரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய தீர்வை அரசாங்கம் முன்வைத்தால் ஐக்கிய தேசியகட்சி முழுமையான ஆதரவினை வழங்கும்.

நாட்டிற்கு சமாதானத்தை கொண்டு வருவதனை நோக்கமாகக் கொண்டே நாட்டின் தலைவர் செயற்பட வேண்டும். மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதே அரசாங்கத்தின் தலையாய கடமையாகும். அந்த வகையில் ஐக்கிய தேசிய கட்சி மக்களின் அபிலாஷைகளை பூர்த்தி செய்வதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் என்றார். (சு-5)

# அத்தியாவசிய பொருட்களின் விலைகள் இரண்டு மாதங்களில் குறைவடையும்

## வர்த்தக வாணிபத்துறை அமைச்சர் பந்துல குணவர்த்தன

(கொழும்பு)

அத்தியாவசிய பொருட்களின் விலைகள் இன்னும் இரண்டு மாதங்களில் குறைவடையும். இதற்கான நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருகின்றேன் என்று வர்த்தக வாணிபத்துறை மற்றும் நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.

அமைச்சர் என்ற வகையில் அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறியதாவது;

அத்தியாவசிய பொருட்களின் விலைகளை குறைப்பதற்கான நடவடிக்கைகளை அமைச்சு மட்டத்தில் மேற்கொண்டு வருகின்றேன். இதற்காக எனது அமைச்சின் ஊடாக மேற்கொள்ள முடியுமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுப்பேன். அந்த வகையில் நாட்டின் இறக்குமதியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளேன்.

இதன்போது இறக்குமதியாளர்கள் பொருட்களின் விலைகள் தொடர்பில் எம்முடன் இணக்கப்பாட்டுக்கு வருவார்கள் என்று நம்புகின்றோம். அத்துடன் அத்தியாவசிய பொருட்களை இறக்குமதி செய்யும் வர்த்தகர்களுடன் உடன்படிக்கைகளையும் செய்யவுள்ளோம். எந்தவகையிலாவது விரைவில் பொருட்களின் விலைகளை குறைப்பதே எனது நோக்கமாகும். அதற்கான முழு முயற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றேன். இருப்பி னும் இந்த செயற்பாட்டை உடனடியாக மேற்கொள்ள முடியாது என்றார். (சு-5)

# இனப்பிரச்சினைக்கான தீர்வினை அரசாங்கம் முன்வைக்க வேண்டும்

## மன்னார் ஆயர் வேண்டுகோள்

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்கான தீர்வு யோசனையை அரசாங்கம் உடனடியாக முன்வைக்க வேண்டுமென்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆட்கடத்தல் ,காணாமல் போதல் மற்றும் கொலை அச்சுறுத்தல் போன்ற மனித உரிமை மீறல்கள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருவதாகவும் அவ்வாறான நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் ஆயர் கோரிக்கை விடுத்தார்.

சமகால அரசியல் நிலைமைகள் தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ஆயர் இராயப்பு ஜோசப் மேலும் தெரிவிக்கையில்;

நோர்வே உட்பட சர்வதேச நாடுகளின் ஏற்பாட்டுடன் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கையை உடனடியாக உரிய முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும். அரசாங்கமும் புலிகளும் அந்த விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்.

சமாதானத்தை ஏற்படுத்துவேன்; அரசியல் தீர்வை முன்வைப்பேன் என்றெல்லாம் ஜனாதிபதி கூறினார். இந் நிலையில் தான் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான யோசனை ஒன்றை முன்வைக்கவுள்ளதாக அரசாங்கம் கூறியுள்ளது.

எவ்வாறாயினும் அந்தத்தீர்வு யோசனையை அரசாங்கம் உடனடியாக முன்வைக்க வேண்டும். சமாதானப் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டுமாக இருந்தால் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்கவேண்டுமென ஜனாதிபதி சுதந்திர தின உரையின்போது கூறியிருந்தார்.

ஆனால் அது ஏற்புடையதல்ல. பேச்சுவார்த்தைக்கு நிபந்தனைகள் அவசியம் இல்லை என்பது ஏற்கனவே பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். எனவேதான் நம்பிக்கை தரும் வகையில் அரசியல் செயல் முறைகளில் மாற்றங்களை கொண்டுவர வேண்டும் என்றார். (எ-5)

# இறுதி பஸ்சேவையின் நேரம் மாற்றம்

யாழ்.குடாநாட்டில் ஊரடங்குச் சட்டம் 6 மணிக்கு அமுல்படுத்தப்படுவதனால் யாழ். மத்திய போக்குவரத்து சாலையில் இருந்து இறுதியாக புறப்படும் பஸ் சேவையின் நேரம் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக யாழ். மத்திய போக்குவரத்து சாலை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பருத்தித்துறை தவிர்ந்த ஏனைய பிரதேசங்களுக்கான இறுதி போக்குவரத்து சேவைகள் யாழ்.மத்திய போக்குவரத்து சாலையில் பி.ப.4.30 மணிக்கும் பருத்தித்துறைக்கான பஸ்சேவை யாழ்.மத்திய போக்குவரத்து சாலையில் இருந்து பிற்பகல் 4மணிக்கும் புறப்படும் என அவர் தெரிவித்தார். (ச-3)

## பாராளுமன்றத்தில்...

பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஆசனங்கள் வழங்கப்படவேண்டும். இதனடிப்படையில் குறித்த உறுப்பினர்க ளுக்கு பின் வரிசை ஆசனங்களை ஒதுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (எ-5)

# 6 சிவிலியன்கள் படுகொலை தொடர்பில் படையினரிடம் விசாரணை நடாத்த உத்தரவு

(வவுனியா)

வவுனியா குருமண்காடு மற்றும் வவுனியா மில் வீதி ஆகிய இடங்களில் கடந்த மாதம் 16ஆம் திகதி இரவு வேளையில் வீதி பாதுகாப்புச் சோதனைச் சாவடிகள் மிகுந்த அதியுயர் பாதுகாப்புமிக்க சூழலில் 6 சிவிலியன்கள் சுட்டுக் கொல்லப்பட்டமை தொடர்பாக சம்பவ இடத்தில் அன்று கடமையிலிருந்த இராணுவம் மற்றும் பொலிஸாரிடம் விசாரணைகள் நடத்துமாறு வவுனியா மாவட்ட நீதிபதி எம்.இளஞ்செழியன் வவுனியா பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்தச் சம்பவங்கள் தொடர்பான மரண விசாரணையில் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மற்றும் சாட்சிகளின் சாட்சிகளை பதிவு செய்த வவுனியா மாவட்ட நீதி பதி எம்.இளஞ்செழியன் இனந்தெரியாதவர்களின் துப்பாக்கிச் சூட்டினால் ஏற்பட்ட மரணங்கள் எனவும் இவைகள் கொலைகள் எனவும் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இக்கொலைகளைச் செய்தவர்களைக் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறும் நீதிபதி தமது தீர்ப்பில் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளார். (ச)

## பிரி.வெளிவிவகார...

இது தவிர பிரித்தானிய அரசாங்கத்தின் அனுசரணையுடன் பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் திட்டங்களையும் பார்வையிடவுள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து 15 ஆம் திகதி கொழும்பில் அவர் அரசாங்க ,வெளிநாட்டு இராஜதந்திரிகள் மற்றும் சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளுடனும் தொடர்ச்சியான பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளார் எனவும் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இடம் பெற்ற மோதல் சம்பவங்கள் காரணமாக இலங்கை மக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் குறித்து அவர் விரிவாக ஆராயவுள்ளதாக அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல்களைத் தவிர்ப்பதற்கான பிரித்தானியாவின் ஆதரவை அதிகரித்து பேச்சுவார்த்தை மூலமான தீர்வை அடைவதற்கு உறுதியான பிரித்தானியாவின் ஆதரவினை வழங்குவதே இந்த இராஜதந்திரியின் நோக்கம் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் ஊடாக இலங்கையில் நிரந்தர சமாதானத்திற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள முடியும் எனவும் பிரித்தானியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது. (ச-3)

# உலகக் கிண்ண கிரிக்கெட் இலங்கை வீரர்கள் அறிவிப்பு

அடுத்த மாதம் 14ஆம் திகதி மேற்கிந்திய தீவுகளில் ஆரம்பமாகும் உலகக்கிண்ண போட்டிக்கான 15 பேர் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் நடுத்தர வரிசை துடுப்பாட்ட வீரரான ரசல் ஆர்னல்ட் மற்றும் நுவான் குலசேகர ஆகியோரும் இணைக்கப்பட்டுள்ளனர்.

இளம் வீரர் சாமர ஹபுக்கெண்டார சகல துறை ஆட்டக்காரர் உபுல் சந்தன மற்றும் ருச்சித பெரேரா ஆகியோர் மேலதிக வீரர்களாக இணைக்கப்பட்டுள்ளனர்.

அணித்தலைவராக மஹேல ஜெயவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளதுடன் பயிற்றுவிப்பாளராக தொடர்ந்தும் ரோம் மூடியே கடமையாற்றுவார் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அணிவிபரம்:-

மஹேல ஜெயவர்த்தனா (அணித் தலைவர்) குமார் சங்கக்கார (விக்கெட் காப்பாளர்) மாவன் அத்தப்பத்து, சனத்ஜெய சூர்யா, உபுல் தரங்க, திலகரட்ண டில்சான், ரசல் ஆர்னல்ட், சாமர சில்வா, பர்வேஷ் மஹரூப், சமிந்த வாஸ், டில்கார பெர்னாண்டோ, லஷித் மலிங்க, நுவான் குலசேகர, முத்தையா முரளிதரன், மலிங்க பண்டார. (ச-5)

## அடுத்தகட்ட நடவடிக்கைகளை...

முன்னாள் ஜனாதிபதியுமான சந்திரிகா நாடுதிரும்பியதும் அவருடன் முக் கிய பேச்சுவார்த்தை ஒன்றை நடத்தி மாற்றுக் குழுவொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் குறித்த அவர் மேலும் கூறியதாவது; அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் எனது அடுத்த கட்ட நடவடிக்கைகளை எதிர்வரும் வாரத்தில் எடுக்கவுள்ளேன்.

என்னை அமைச்சுப் பதவியிலிருந்து நீக்குவதற்கு எந்தவிதமான காரணங்களும் இல்லை. அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீவிரமாக ஆராய்ந்துவருகின்றேன்.

நான் எந்தக் கட்டத்திலும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்து விலகமாட்டேன். என்னை சுதந்திரக் கட்சியிலிருந்து எவராலும் விலக்கவும் முடியாது. அமைச்சுப் பதவியிலிருந்து நீக்கப்பட்டமை தொடர்பில் ஆராய்ந்து வருகின்றோம்.

இது தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவுடனும் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளோம். இதேவேளை பதவி நீக்கம் செய்யப்பட்ட அமைச்சர்களான அநுரா பண்டாரநாயக்கா மங்கள சமரவீர மற்றும் சிறிபதி சூரியாராச்சி ஆகியோர் இன்று செய்தியாளர் மாநாடொன்றினை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ச-5)

## சட்டத்திலிருந்து...

கட்டத்தில் உள்ளது.

பயங்கரவாதத்தை அழிக்க பாதுகாப்பு அதிகாரிகளுடன் சேர்ந்து ஜனாதிபதி நீண்ட தூரம் பயணிக்க வேண்டி உள்ளது. ஜனாதிபதியால் எடுக்கப்படும் முடிவுகள் பொதுமக்களின் ஆசீர்வாதத்துடனேயே மேற்கொள்ளப்படுகின்றன. இராணுவத்தினரின் வெற்றிகளை யாராவது தொந்தரவு செய்ய முயன்றால் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர். (எ-5)

## சாவகச்சேரியில் நேற்று...

இடத்திலேயே உயிரிழந்தார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த சாவகச்சேரி கச்சாய் வீதியைச் சேர்ந்த செல்வத்தம்பி செல்வரூபன் (வயது 27) என்ற இளைஞன் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனாவைத்தியசாலைக்கு கொண்டு வரப்பட்ட போது வழியில் உயிரிழந்தார்.

இறைச்சி கொள்வனவு செய்வதற்கு வந்ததாக கூறி குறித்த கடைக்கு இலக்கத் தகடில்லாத சிவப்பு ரி.வீ.எஸ்.மோட்டார் சைக்கிளில் வந்த ஆயுததாரிகளே துப்பாக்கிச்சூடு நடாத்தி விட்டு தப்பிச்சென்றதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

சம்பவ இடத்திற்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி மாவட்ட நீதிவான் அ.பிறேம்சங்கர் பிரேதபரிசோதனையின் பின் சடலங்களை உறவினர்களிடம் ஒப்படைக்குமாறு சாவகச்சேரிப் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (எ-1,3)

## திருகோணமலை...

சென்ற புலிகளின் படகுகளே தாக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

கைப்பற்றப்பட்ட படகில் இருந்த விடுதலைப்புலிகள் அமைப்பு உறுப்பினர் ஒருவரின் சடலமும் சில ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தத் தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தரப்பில் செய்திகள் எதுவும் வெளியாகவில்லை. (ச-3,5)

## நெடுங்கேணியை...

கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன.

இத்தாக்குதல்நடைபெற்ற போது வேவு விமானம் அப் பகுதியை சுற்றி வட்டமிட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனிடையே நேற்றுக் காலை யாழ்.முகமாலைப் பகுதியிலிருந்து வடமராட்சி கிழக்கு மற்றும் பளைப் பகுதியை நோக்கி எறிகணை வீச்சுத்தாக்குதல் நடத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. (ச-5)

## சிறுவர்களை படையில் சேர்ப்பது தொடர்பில்...

ஐக்கிய நாடுகள் சபையின் செயற்குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை, ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபைக்கு சில பரிந்துரைகளை செய்துள்ளது.

மேலும் விடுதலைப்புலிகள் மற்றும் கருணா குழுவினர் மீதும் சிறார் படைச்சேர்ப்பை நிறுத்துவதற்கு ஏதுவாக சில அழுத்தங்களை ஏற்படுத்துமாறும் பரிந்துரை செய்துள்ளது.

அலன் றொக்கின் அறிக்கையில்; அரசு மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள், விடுதலைப்புலிகள் மற்றும் கருணா குழுவினர் மேற்கொள்ள வேண்டியவை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு மேற்கொள்ள வேண்டியவை குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கருணா குழுவினரின் சிறார் படைச்சேர்ப்பில் அரச படையினரின் பங்களிப்பு தொடர்பாக முழுமையான நம்பகத்தன்மையான விசாரணைகளை அரசு நடத்த வேண்டும். எந்தப் பிரிவினரின் பழிவாங்கும் தாக்குதல்களில் இருந்தும் முறைப்பாடு செய்பவர்கள், சாட்சிகள் ஆகியோரின் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல், விசாரணைகளை வெளிப்படையாக நடத்துதல், அரசினால் நடத்தப்படும் விசாரணைகளின் உண்மைத்தன்மை ,நேர்மை ஆகியவற்றில் அனைத்துலக சமூகம் திருப்தியடைய வேண்டியது இதில் அடங்கும்.

சிறார் கடத்தலில் ஈடுபடும் எல்லாத் தரப்பினர் மீதும் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். கருணா குழுவினரால் கடத்தப்பட்ட சிறார்களை பாதுகாப்பாக விடுவித்து அவர்களின் பெற்றோருடன் சேர்ப்பிக்க வேண்டும்.

பொலிஸாரும் ,படையினரும் அவர்களிடம் முறையிடப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக பூரண விசாரணைகளை நடத்துவதுடன் கடத்தலில் ஈடுபடும் எந்தத்தரப்பு ஆனாலும் தக்க நடவடிக்கை எடுப்பதுடன் கடத்தப்பட்ட சிறார்களும் கண்டு பிடிக்கப்பட்டு விடுவிக்கப் படவேண்டும்.

சிறார் கடத்தலில் ஈடுபடுவோருக்கு எதிராக கடுமையான சட்டங்களை அரசு கொண்டு வரவேண்டும்.மனிதாபிமான உதவிகள் பாதிக்கப்பட்ட மக்களை சென்றடைவதற்கு உதவிகளை வழங்க வேண்டும்.

இலங்கையில் உள்ள முஸ்லிம் சமூகத்தின் நலன்களும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படவேண்டும். குறிப்பாக சிறார்களின் பாதுகாப்பு முக்கியமானது.

விடுதலைப்புலிகளும் கருணா குழுவினரும் 18 வயதுக்குக் குறைந்தோரை படையில் சேர்ப்பதை உடனடியாக நிறுத்த வேண்டும். சிறார்களை தமது படைகளில் இருந்து விடுவிப்பதுடன் யுனிசெப்புடன் இணைந்து அவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களுடன் சேர்க்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

தமது தளபதிகளுக்கு சிறார் படைச்சேர்ப்புத் தொடர்பான பல கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டும். சிறார்கள் படையில் உள்ளனரா எனச் சோதனை இடுவதற்கு முகாம்களுக்கு யுனிசெப் மற்றும் அனைத்துலக சிறார் பாதுகாப்பு அமைப்புக்களை அனுமதிக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-5)

## முல்லைத்தீவில்...

பயன்படுத்தியே மேற்கொள்ளப்பட்டதாக தகவல் நிலையம் அறிவித்துள்ளது.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகப் பகுதியான வன்னிப் பகுதி மீது ஆறு கிபீர் ரக குண்டுவீச்சு விமானங்கள் நேற்று கடுமையான குண்டு வீச்சுத்தாக்குதலை நடத்தியுள்ளதாக வன்னித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முல்லைத்தீவு மாவட்டம் விசுவமடுவில் நேற்றுக் காலை 9 மணி முதல் 9.30 மணி வரை மக்கள் குடியிருப்புக்களை அண்டிய பகுதிகளில் 18 குண்டுகள் வீசப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

வேவு விமானம் வட்டமிட்டுக்கொண்டிருக்க இத் தாக்குதல் நடத்தப்பட்டதாக அப்பகுதி தகவல் தெரிவிக்கின்றன. இதனிடையே வன்னிக்கான ஓமந்தை போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுள்ளது. சில வாகனங்களே போக்குவரத்துக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (எ-3,5)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.02.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.